# மீள்குடியேற்ற திட்டம்




## அக்டோபர் 2020

## சென்னை எல்லைச் சாலை திட்டம் பிரிவு–2

**தமிழ் நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்**

**நெடுஞ்சாலைதுறை (தமிழ் நாடு அரசு)**




SECTION I : Northern Port Access Road - Ennore Port to Thatchur on NH-5 (25.31 km)
SECTION II : Thatchur on NH-5 to Start of Thiruvallur Bypass (26.20 km)
SECTION III : Start of Thiruvallur Bypass to Sriperumbudur on NH-4 (30.60 km)
SECTION IV : Sriperumbudur on NH-4 to Singaperumalkoil on NH-45 (23.80 km)
SECTION V : Singaperumalkoil on NH-45 to Mamallapuram (27.471 km)

LEGEND:-
- NH
- SH
- MDR
- ODR
- Railway Track
- Reserved Forest
- Water Body

C:\Users\Admin\Dropbox\My PC (Dell3)\Desktop\RP\CPRR Resettelment Report 08.10.2020.docx

## தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்

## சென்னை எல்லைச்சாலை திட்டம்

### மறுகுடியமர்வு கொள்கை சுருக்கம்

தமிழ்நாடு அரசு வளர்ந்து வரும் போக்குவரத்து வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்புகளின் காரணமாக, பல்வேறு திட்டங்களை தெரிவு செய்து செயலாக்கம் செய்து வருகிறது. அதன் தொலைநோக்கு பார்வை திட்டம் 2023ன் ஒரு திட்டம் சென்னை எல்லைச் சாலை திட்டமாகும். சென்னையின் சுற்றுப்புறத்தின் பல்வேறு தொழிற்சாலை பகுதிகளை இணைக்கும் விதமாகவும், எதிர்காலத்தில் வளர்ந்து வரும் வணிக போக்குவரத்தை மேம்படுத்தி துறைமுகங்களை இணைக்கும் கருத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எண்ணூர் துறைமுகம் முதல் பூஞ்சேரி சந்திப்பு மகாபலிபுரம் வரை கி.மீ. 133.381 மொத்த நீளம் கொண்ட இந்த திட்டம் 5 பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் பிரிவு 2 மற்றும் பிரிவு 3க்கான கி.மீ. 56.20 நீளமுள்ள சாலை ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் திறந்த நிதியில் செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், திட்ட செயலாக்க பிரிவு சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் மறுகுடியமர்வு கொள்கையை தயாரித்துள்ளது. இந்த மறுகுடியமர்வு கொள்கை, நில எடுப்பு, ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துதல் மற்றும் இதனால் தனி நபர்கள், குடும்பங்கள் மற்றும் சமுதாயத்திற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்படும் சமூக சிக்கல்களை தீர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கொள்கை ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக வரையறை (ESF) 2016, தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, நில எடுப்பு மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்விற்கான உரிய நியாயவிலையை வெளிப்படை தன்மையோடு வழங்கும் 2013 சட்டம் (RFCTLARR 2013) ஆகியவற்றின் இணக்கமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு–2ல் தச்சூர் அருகே தே.நெ.–16ன் கி.மீ. 21/700 தச்சூரில் தொடங்கி கீழானூர் கிராமத்திற்கு அருகில் மா.நெ. –57ன் கி.மீ. 47/800ல் முடிகிறது. கி.மீ 26.10 பிரிவின் முழு நீளமும் புதியதாக உருவாக்கப்படுகிறது. இச்சாலை திருவள்ளூர் மாவட்டத்தின் 3 தாலுக்காக்களில் பரவிய 17 வருவாய் கிராமங்கள் வழியாக செல்கிறது. இதன் நேர்பாடு மா.நெ–51ன்

கி.மீ 29/100 மற்றும் மா.நெ–50Aன் கி.மீ. 37/200ல் கடக்கிறது. திட்டமிட்டுள்ள நேர்பாடு மா.நெ–57ன் கி.மீ. 41/100 முதல் கி.மீ. 47/800 வரை குடியேற்றங்களுக்கு பாதிப்பை தவிர்ப்பதற்காக மா.நெ–57 வசிப்பிடங்களுக்கு பின்னால் இணையாக செல்கிறது. திட்டமிடப்பட்டுள்ள சாலையின் அகலம் 60 மீ. முக்கியமான சந்திப்புகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் வாகன சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட உள்ளது. மேலும் கன்னிகைப்பேர் கண்மாய் மற்றும் தாமரைப்பாக்கம் கிராம கொசஸ்தலையாரின் குறுக்கே பாலங்கள் அமைக்கப்பட உள்ளன.

பிரிவு 2ல் உள்ள திட்டத்தில் 183.47 ஹெக்டேர் அளவிலான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் அரசு நில மாற்றம் செய்யப்பட உள்ளது. 1022 விவசாய நில உரிமையாளர்கள் மற்றும் 97 குடியிருப்புகள், 3 வணிக கட்டிடங்கள், 2 குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்கள், 8 சிறிய பெட்டி கடைகள், 3 சிறிய அளவில் பாதிப்புக்குள்ளான கட்டமைப்புகள் (சுற்றுச்சுவர் மற்றும் கைவிடப்பட்ட கட்டிடங்கள்) அடங்கிய 113 கட்டமைப்புகள் பாதிப்புக்குள்ளாகிறது. மேலும் 21 பொது சொத்துக்களும் பாதிக்கப்படும். பாதிக்கப்பட்டுள்ள 113 கட்டிடங்களில் 68 உரிமையாளர்களும், 45 கட்டமைப்புகளுக்கு நேரடி உரிமையற்றவர்களும் அடங்குவர். மா.நெ–57ல் தற்போதுள்ள குடியமர்வின் பின்னால் சுமார் 6.30 கி.மீ.க்கு நேர்பாட்டை அமைப்பதின் மூலம் அதிகப்படியான பாதிப்புகளை குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த திட்டம், 3 பழங்குடி குடும்பங்கள் மற்றும் 52 நரிக்குறவர் குடும்பங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களை வசிக்கும் இடத்தை இழக்க நேரிடும். பாதிக்கப்பட்ட 3 பழங்குடி குடும்பங்கள் மற்றும் 52 நரிக்குறவர் குடும்பங்கள் ஆதி பழங்குடியினர் இல்லை. எனினும் இந்த குடும்பங்கள் சமூக ரீதியாக விலக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாக தகுதி பெறுவர்.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையின் (DPR) ஒரு பகுதியாக சமூகத்தை ஈடுபடுத்துவதற்கும், திட்டத்தைப் பற்றிய பொது புரிதலை உருவாக்கவும், இழப்பீடு, புனரமைப்பு மற்றும் மறுகுடியமர்வு ஆகியவற்றின் தாக்கத்தை அறிய தனி நபர் நேர்காணல் மற்றும் சம்மந்தப்பட்ட கலந்தாய்வுகள் பாதிக்கப்பட்ட நபர்களிடையே, சமூக பொருளாதார கணக்கெடுப்பின் போது மேற்கொள்ளப்பட்டது. கோவிட்–19

பெருந்தொற்றின் காரணமாக, கணக்கெடுப்பு முடிவுகள், நடுநிலையான மறுகுடியமர்வு கொள்கை ஏற்பாடுகள் மற்றும் பாதிப்புகளை தனிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றை வெளிப்படுத்த ஆலோசனை கூட்டங்கள் நடத்த இயலவில்லை. எனவே, கட்டுமான பணிகள் தொடங்குவதற்கு முன் திட்ட நடவடிக்கைகள், கட்டுமான காலம் ஆகியவற்றைப் பற்றி பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பிற (குடியிருப்புக்கள், விவசாய நில உரிமையாளர்கள், கடைகள்) பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்களை பெற ஆலோசனை கூட்டங்கள் மற்றும் தவன குழு விவாதங்கள் (Focus Group Discussions) மேற்கொள்ளப்பட உள்ளன.

மறுகுடியமர்வு கொள்கையின் மொழிபெயர்க்கப்பட்ட சுருக்கம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மறுகுடியமர்வு கொள்கையின் சுருக்க நகல்களை (1) நில எடுப்பு, மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வு அலுவலகம், (2) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர் (3) கோட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் (4) ஊராட்சி / நகராட்சி / மாநகராட்சி அலுவலகங்களில் கிடைக்கப்பெரும்.

நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு சட்டம் 2013 (RFCTLARR 2013)ன் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படை தன்மையான நிலம் கையகப்படுத்துதல், தமிழ்நாடு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு விதிகள் 2017, தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, தமிழ்நாடு நெடுஞ்சாலை விதி 2003, ஆசிய உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக கட்டமைப்பு விதிகள் 2016 மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கியின் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நடவடிக்கைகள் 2018 ஆகியவைகளைக் கொண்டு இந்த திட்டத்திற்கான கொள்கை கட்டமைப்பு வரையறுக்கப்டுகிறது.

இந்த மறுகுடியமர்வு திட்ட கட்டமைப்பு கொள்கைகளுக்கு இணங்க, பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் நபர்களுக்கும் இழப்பீட்டுத் தொகுப்புகள் (இழந்த சொத்துக்களின் உரிமைகளின் தன்மை மற்றும் சமூக பொருளாதார பாதிப்புகளின் தீவிரம் ஆகியவற்றை பொருத்து இழப்பீடுகள், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உதவிகள்) வழங்கப்படும். பாதிக்கப்பட்ட நபர்களின் வாழ்வாதார பாதிப்புகள் சமூக பொருளாதார வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த மறுகுடியமர்வு கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட எதிர்பாராத தாக்கங்களும் குறைக்கப்படும். நில உரிமையாளர்களுக்கு

இந்த கொள்கையின் கீழ் வர தகுதிக்கான கடைசி நாள், தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் 2001ன் பிரிவு 15(2)ன் கீழ் கையகப்படுத்தப்பட்ட அறிவிப்பு தேதியாகும். மற்றவர்களுக்கு பிரிவு2 திட்டத்தின் கணக்கெடுப்பு தொடக்க தேதி 25.12.2019 ஆகும்.

மறுகுடியமர்த்தப்பட உள்ள மக்களின் விருப்பங்களுக்கேற்ப இடபெயர்வுக்கு பொருத்தமான மறுகுடியமர்வு தளங்களின் தேர்வுகளும், மேம்பாடும் செய்யப்பட வேண்டும். இதில் இடம்பெயர்ந்த சிறிய குழுக்களுக்கான மறுகுடியமர்வு தளங்களும் ஆராயப்பட வேண்டும். நில எடுப்பு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு அலுவலகம், அரசுசாரா தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இடம் பெயரும் குடும்பங்களுக்கு தகுந்த இடங்களை தேர்வு செய்ய வேண்டும். அவ்வாறு விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதில், அம்மணம்பாக்கம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்கள் விருப்பத்தை, இத்திட்டம் அமைக்கும் குடியிருப்பை ஏற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

இந்த திட்டத்திற்கான மறுகுடியமர்வு செலவு மதிப்பீட்டில் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு (RFCTLARR 2013) சட்டம் நியாயமான விதிகளின்படி இழப்பீடு மற்றும் வெளிப்படை தன்மைக்கான விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்ட தனியார் நிலங்களுக்கான இழப்பீடு அடங்கும். இது தமிழ்நாடு நியாயமான இழப்பீட்டிற்கான உரிமை மற்றும் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு விதிகளில் 2017ன் படி தேய்மானம் இல்லாத மாற்று கட்டுமான செலவு இழப்பீடு, சென்னை எல்லைச் சாலை மறுகுடியமர்வு கட்டமைப்பு விதிகள் மற்றும் மறுகுடியமர்வு திட்ட அமலாக்க செலவு ஆகியவற்றின் படி நில உரிமையாளர்கள், பட்டாதாரர்கள், உரிமையின்றி பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் உதவிகள் அளிக்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மறுகுடியமர்வு செலவு ரூ. 3,563.95 மில்லியன் ஆகும்.

நிலம் கையகப்படுத்தும் இழப்பீடு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உதவிகள் மற்றும் மறுகுடியமர்வு திட்ட அமலாக்க செலவுகளுக்கு போதுமான நிதியை அரசு வழங்கும். இந்த நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் மதிப்பிடப்பட்ட நிதி மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் தேவைப்படும் கூடுதல் நிதி ஆகியவை திட்ட மேலாண்மை பிரிவு (PMU)ஆல் கிடைக்கப்பெரும். இவை நிதி ஆண்டின் தொடக்கத்தில் தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின்

செயல் இயக்குநர் திட்ட செயலாக்கப் பிரிவு (PIU)ன் வசம் இருக்கும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக நிலம் மற்றும் மறுகட்டமைப்பிற்காக இழப்பீடு மற்றும் மறுகுடியமர்வுகளுக்கான செலவு ஆகியவற்றை நில எடுப்பு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவு (LARRU)க்கு சரியான நேரத்தில் தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் திட்ட செயலாக்கப் பிரிவு (PIU) வழங்கும்.

இடம் பெயர்ந்தோரின் குறைகள், புகார்கள் மற்றும் மனுக்களை பெற்று மதிப்பீடு செய்து மற்றும் குறை தீர்ப்பு ஏற்பாடுகளை செய்வதற்கு இரண்டு மட்டங்களில், மண்டல அளவிலும் மற்றும் மாநில அளவிலும் குறை தீர்க்கும் குழு (GRC) நிறுவப்பட்டுள்ளது. சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் மேலாண்மை பிரிவு (PMU) ஒரு திட்ட இயக்குநரால் தலைமை வகிக்கப்படும். அவருடன் ஒரு தலைமைப் பொறியாளர், ஒரு கண்காணிப்புப் பொறியாளர், ஒரு கோட்டப் பொறியாளர், ஒரு உதவிக் கோட்டப் பொறியாளர், இரண்டு உதவிப் பொறியாளர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்கள் உறுதுணையாக செயல்படுவார்கள். திட்ட இயக்குநர் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பொறுப்பாளராக இருப்பார் மற்றும் மறுகுடியமர்வு திட்டத்திற்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு ஆணையராகவும் செயல்படுவார்.

தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் திட்ட செயலாக்கப் பிரிவு (PIU), நிலம் கையகப்படுத்த மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தை செயல்படுத்த, நில எடுப்பு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவு (LARRU)யுடன் இக்குடியமர்வு திட்டத்தை செயல்படுத்தும்.

கோட்டப் பொறியாளர், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தை செயல்படுத்த நில எடுப்பு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவு (LARRU)உடன் துணை அதிகாரியாக செயல்படுவார். நிலம் கையகப்படுத்துவதை விரைவுபடுத்துவதற்கும் மறுகுடியமர்வு திட்டங்களின் விதிகளை அமல்படுத்துவதற்கும், நில எடுப்பு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவு (LARRU) அமைக்கப்பட்டுள்ளது. மறுகுடியமர்வு திட்டங்களை செயல்படுத்துவதற்கு, மறுகுடியமர்வு திட்டங்களை செயல்படுத்துவதில் முன்அனுபவமும், இது போன்ற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் பணியாற்றுவதில் அனுபவமும் உள்ள ஒரு அரசுசாரா அமைப்பு / நிறுவனம் மறுகுடியமர்வு திட்டத்தை செயல்படுத்த நில எடுப்பு,

மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவு (LARRU)க்கு உதவுவதற்காக திட்ட செயலாக்கப் பிரிவு (PIU)ஆல் அமர்த்தப்படும்.

மறுகுடியமர்வு திட்டத்திற்கான கண்காணிப்பு முறை, உள்கண்காணிப்பை கொண்டிருக்கும் (Internal Monitoring). மறுகுடியமர்வு திட்டத் திறம்பட செய்வதற்கும் நில எடுப்பு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவு (LARRU) சேகரித்த கண்காணிப்பு சான்றுகளை சரிபார்க்கவும், திட்ட அமலாக்கத்தின் பொழுது உள்கண்காணிப்பு பல்வேறு கட்டங்களிலும் முறையே மேற்கொள்ளப்படும்.